**இலங்கை-அமெரிக்க பாராளுமன்ற நட்புறவுச் சங்கத்தினை மீள ஆரம்பிக்கும் நிகழ்வில் தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள்**
**பெப்ரவரி 23, 2023, வியாழக் கிழமை, பிற்பகல் 2:30**
**பாராளுமன்றம், குழு அறை #2**

கௌரவ சபாநாயகர் அவர்களே, கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களே, இலங்கை - அமெரிக்க பாராளுமன்ற நட்புறவுச் சங்கத்தை மீள ஆரம்பிப்பதற்காக இன்று பாராளுமன்றத்தில் உங்களுடன் இணைந்து கொள்வதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். இந்த முக்கியமான சங்கத்திற்கு புத்துயிரூட்டுவதற்கு மேற்கொண்ட முன்முயற்சிகளுக்காக கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் சந்திம வீரக்கொடி அவர்களுக்கு நான் குறிப்பாக நன்றி தெரிவிக்க விரும்புவதுடன், இச்சங்கத்தில் இணைந்துகொள்வதற்கு ஆர்வமுள்ள பல்வேறு அரசியல் கட்சிகளின் உறுப்பினர்களையும் நான் பாராட்டுகிறேன்.

எமது இரு நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு உறவுகளின் 75 ஆவது ஆண்டு நிறைவைக் குறிக்கும் இந்த ஆண்டில் இச்சங்கத்தை நாங்கள் தொடங்கிவைப்பது மிகவும் பொருத்தமானது. ஆரம்பத்திலிருந்தே, எமது உறவானது பகிரப்பட்ட மதிப்பீடுகள், ஜனநாயகக் கொள்கைகளுக்கான ஆழமான அர்ப்பணிப்பு, மற்றும் வர்த்தகத் துறை, கல்வி, கலை மற்றும் கலாச்சாரம் மட்டுமன்றி அதற்கு அப்பாலுள்ள விடயங்களிலும் நிலவுகின்ற மக்களுக்கிடையிலான செழிப்பான உறவுகள் ஆகியவற்றின் அடிப்படையில் அமைந்ததாகும்.

இலங்கைப் பொருட்களுக்கான முதலாவது சந்தையாக அமெரிக்கா விளங்குவதையிட்டு நான் பெருமையடைகிறேன். 70 வருடங்கள் பலமான அமெரிக்க-இலங்கை ஃபுல்பிரைட் ஆணைக்குழு மற்றும் இலங்கையின் கடல்சார் பாதுகாப்பை மேம்படுத்துவதற்கு உதவுவதற்காக நாங்கள் அண்மையில் அன்பளிப்பாக வழங்கிய அழகான கடலோர காவலுக்கான கப்பல் உள்ளிட்ட எமது ராணுவங்களுக்கிடையிலான குறுக்குப் பயிற்சி மற்றும் பங்காண்மை போன்ற நாங்கள் இணைந்து பணியாற்றும் ஏனைய அனைத்து வழிகள் தொடர்பாகவும் நான் பெருமையடைகிறேன். 75 ஆண்டுகளாக மக்கள், முன்னேற்றம் மற்றும் பங்காண்மை ஆகியவற்றின் அடிப்படையில் அமெரிக்காவும் இலங்கையும் ஒரு உறவைக் கட்டியெழுப்பியுள்ளன.

இந்த நெருக்கடியான காலகட்டத்தில் இலங்கை மக்களுக்கு உதவி செய்வதற்காக கடந்த ஆண்டு அமெரிக்க மக்கள் முன்வந்தனர். பாடசாலை மதிய உணவு நிகழ்ச்சித் திட்டங்கள், விவசாயிகளுக்கான உரம், கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான ஊட்டச்சத்து உதவி போன்றவற்றிற்கான நிதியளிப்பாக - கடந்த ஆண்டில் மட்டும் 270 மில்லியன் டொலர்களை புதிய உதவிகளாக நாம் அறிவித்துள்ளோம். தேவையுடைய மக்களை இந்த உதவிகள் சென்றடைவதை உறுதிசெய்வது எனக்கு மிகமுக்கியமான முன்னுரிமையாக இருந்தது. நீங்கள் பிரதிநிதித்துவப்படுத்தும் மக்களுக்கு உதவி செய்வதற்காக அவை ஒரு நீண்ட தூரம் சென்றுள்ளது என நான் நம்புகிறேன்.

இது ஒரு சவாலான நேரம் என்பதை நான் அறிவேன், அதேவேளை இது இலங்கைக்கு நம்பிக்கை மற்றும் வாய்ப்புக்கான ஒரு நேரமுமாகும். ஒன்றாக இணைந்து உங்கள் நாட்டின் எதிர்காலத்தை நீங்கள் எழுதுவீர்கள். அது ஒரு எளிதான விடயமாக இருக்காது, எனினும் உங்களது ஆழ்ந்த ஈடுபாடு மற்றும் உங்களது உழைப்பை நான் அதிகம் மதிக்கிறேன் என்பதை நீங்கள் அறிந்து கொள்ளுங்கள்.

ஒரு சுதந்திரமான சட்டவாக்கக் கிளை என்பது எமது நாடுகள் பகிர்ந்து கொள்ளும் ஜனநாயகக் கொள்கைகளின் மையத்தில் உள்ள விடயமாகும். அமெரிக்கா மற்றும் இலங்கை ஆகிய இரண்டு நாடுகளுமே பொதுமக்களின் நலன்களுக்கு சேவை செய்தல், கொள்கைகள் தொடர்பான திறந்த கலந்துரையாடல்கள் மற்றும் வெளிப்படையான முடிவுகளை போஷித்தல் மற்றும் ஏனைய அரசாங்க நிறுவனங்களை மேற்பார்வை செய்தல் போன்ற நோக்கங்களை நிறைவேற்றுவதற்கான தேசிய சட்டவாக்க சபைகளை உள்ளடக்கிய கட்டுப்படுத்தல்கள் மற்றும் சமநிலை அமைப்புகளைக் கொண்டுள்ளன.

உறுப்பினர்களுக்கிடையிலும், உறுப்பினர்களுக்கும் அரசாங்கத்திற்கிடையிலும் அடிக்கடி ஏற்படும் காரசாரமான வாக்குவாதங்கள் காரணமாக வெளிநபர்களுக்கு பாராளுமன்றத்தின் அன்றாடப் பணிகள் சில சமயங்களில் குழப்பமாகவும், கலகம் நிறைந்ததாகவும் தென்படும் என்பதை நான் அறிவேன். நிச்சயமாக அமெரிக்க காங்கிரஸிலும், எண்ணற்ற மாநில மற்றும் உள்ளூர் சட்டசபைகளிலும் அது காணப்படுகிறது. எனினும் புரிந்துகொள்ளக்கூடிய வகையில் மிகவும் சர்ச்சைக்குரியதாக இருக்கக்கூடிய பிரச்சினைகளின் மீதான இந்த உக்கிரமான விவாதங்கள் மற்றும் கூர்மையான கேள்விகள் அனைத்துமே, அனைவரது கருத்துக்களையும் வெளிப்படுத்துவதற்கு அனுமதிப்பதற்கும், அரசாங்கம் தொடர்ந்தும் மக்களின் விருப்பத்தை பிரதிபலிப்பதை உறுதி செய்வதற்கும் அவசியமானதாகும்.

எங்களது பொதுவான ஜனநாயகக் கொள்கைகளுடன், பொறுப்புக்கூறும் நிறுவனங்களை உருவாக்குதல், அனைத்து சமூகங்களுக்கும் அரசியல் பிரதிநிதித்துவத்தை உறுதி செய்தல் மற்றும் அனைவருக்கும் வளமான எதிர்காலத்தை உருவாக்குவதற்கான பொருளாதார வாய்ப்பை உருவாக்குதல் போன்ற பல முக்கிய இலக்குகள் அமெரிக்காவிற்கும் இலங்கைக்கும் பொதுவானதாகக் காணப்படுகின்றன. வர்த்தகம் மற்றும் முதலீடு, கல்விப் பரிமாற்றங்கள் மற்றும் ஏனைய பிற பரிமாற்றங்கள் மற்றும் இந்த இலக்குகளை முன்னெடுப்பதற்கான அபிவிருத்தி உதவிகள் ஆகியவற்றை உள்ளடக்கிய பன்முகத்தன்மை கொண்டதாக இலங்கையுடனான எமது உறவு காணப்படுகிறது. இலங்கை தனது வரலாற்றில் மிகப்பெரிய சவால்களை எதிர்கொள்ளும் இக்காலத்தில் இவற்றிற்காகப் பாடுபடுவது மிகவும் முக்கியமானதாகும். போதைப்பொருள் கடத்தல் மற்றும் ஆட்கடத்தல் போன்ற பிராந்திய பாதுகாப்பு சவால்களையும் காலநிலை மாற்றம் போன்ற உலகளாவிய பிரச்சனைகளையும் கையாள்வதில் எமது இரு நாடுகளும் ஒன்றிணைந்து பணியாற்றி வருகின்றன.

அமெரிக்க-இலங்கை உறவுகளின் அனைத்து அம்சங்களிலும் பாராளுமன்றத்திற்கு ஒரு மிக முக்கியமான பங்கும் ஆர்வமும் இருக்கிறது. இப்பாராளுமன்றத்துடன் நாம் கொண்டுள்ள நேரடி உறவை நாங்கள் பெரிதும் மதிக்கிறோம். 2015 ஆம் ஆண்டு முதல் USAID ஊடாக அமெரிக்க அரசாங்கம் இந்த சட்டமியற்றும் அமைப்புடன் கொண்டிருக்கும் ஒத்துழைப்பை எண்ணி நான் மிகவும் பெருமையடைகிறேன். நாம் அடைந்த வெற்றிகளுள் சிலவற்றைக் குறிப்பிடுவதாயின் USAID உதவியுடன் பாராளுமன்றத்தில் தாபிக்கப்பட்டுள்ள முழுமையாக செயற்படும் ஒரு ஊடக மையம் மற்றும் மூன்று மில்லியனுக்கும் அதிகமான ஆவணங்களைக் கொண்ட ஒரு காப்பகம் என்பவற்றைக் குறிப்பிடலாம். அவற்றின் காரணமாக பாராளுமன்றத்தின் மக்களைச் சென்றடையும் திறன் மற்றும் ஆராய்ச்சித்திறன் என்பன அதிகரித்துள்ளன. இவற்றிற்கு மேலதிகமாக, பொது மக்களைச் சென்றடையும் திறன் உட்பட பாராளுமன்ற தொழிற்பாடுகளை பலப்படுப்படுத்துவதற்காக குழு அறைகளுக்கு ஒரு புதிய ஒலி-ஒளி/கட்புல உபகரணத்தினை USAID வழங்கியது. USAID ஆனது துறைசார் மேற்பார்வைக் குழுக்களை அமைப்பதற்கும் உதவி புரிந்துள்ளது. பாராளுமன்றம் தற்போது மறுசீரமைக்கப்படுவது எனக்குப் புரிகிறது. இடைக்கால

பாராளுமன்ற வரவு செலவுத்திட்ட அலுவலகத்தை நிறுவுவதற்கு உதவி செய்ததை எண்ணி நாங்கள் மிகவும் மகிழ்ச்சியடைகிறோம். இது பாராளுமன்றத்தின் பகுப்பாய்வு மற்றும் பொது நிதியில் முன்னுரிமைகளை தீர்மானிக்கும் திறனை அதிகரிப்பதில் ஒரு முக்கியமான படியாகும்.

பொதுமக்களின் நலனுக்காக இலங்கை ஜனநாயகத்தின் தூண்களில் ஒன்றைப் பலப்படுத்துவதற்கான இந்த ஒத்துழைப்பைத் தொடர நாங்கள் ஆர்வமாக உள்ளோம். பாராளுமன்றத்திற்கும் அமெரிக்க காங்கிரசிற்கும் இடையிலான சுற்றுலாக்கள் மற்றும் பரிமாற்றங்களை மீண்டும் ஆரம்பிப்பது தொடர்பாக நாங்கள் மிகுந்த மகிழ்ச்சியடைகிறோம். துரதிர்ஷ்டவசமாக, கொவிட் பெருந்தொற்று காரணமாக சில வருடங்களாக இந்த நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டிருந்தன, எனினும் சில மாதங்களுக்கு முன்னர் செனட்சபையின் வெளிநாட்டு உறவுகள் குழுவின் பணியாளர்களைக் கொண்ட தூதுக்குழுவொன்று இலங்கைக்கு வந்தது, அத்துடன் எதிர் வரும் மாதங்களில் ஊழியர்கள் மட்டுமன்றி, காங்கிரசின் உறுப்பினர்களையும் உள்ளடக்கிய இன்னும் அதிகமான தூதுக்குழுக்கள் தொடர்ந்து வருகை தரும் என நாங்கள் எதிர்பார்க்கிறோம். மேலும் அமெரிக்காவிற்கான பாராளுமன்ற கல்விச் சுற்றுலாக்களை மீண்டும் ஆரம்பிப்பதற்கும் நாங்கள் ஆர்வமாக உள்ளோம்.

இரண்டு சட்டவாக்க சபைகளுக்கும் இடையிலான பயனுள்ள பரிமாற்றங்களுக்கான மிகவும் நம்பிக்கைக்குரிய தளங்களில் ஒன்றாக U.S. House Democracy Partnership விளங்குகிறது. 2016ஆம் ஆண்டு இலங்கை அதில் இணைந்ததில் இருந்து, காங்கிரசின் உறுப்பினர்களைக் கொண்ட ஒரு தூதுக்குழுவின் வருகை உட்பட பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் ஊழியர்களுடனான பல ஈடுபாடுகளை அது மேற்கொண்டுள்ளது. இப்பங்காண்மையில் இலங்கை செயற்பாட்டு ரீதியாகப் பங்குபற்றுவதை மீண்டும் ஆரம்பிப்பதற்கான சரியான தருணம் இதுவாகும். ஆராய்ச்சி மற்றும் மேற்பார்வை பொறிமுறைகளை பலப்படுத்துதல் போன்ற விடயங்களில் காங்கிரசின் அனுபவத்திலிருந்து இந்த தளம் மற்றும் பிற பரிமாற்ற முன்முயற்சிகள் ஊடாக பாராளுமன்றம் பயனடையலாம். மற்றும் இலங்கையின் பல்வேறு சமூகங்கள் மற்றும் அரசியல் கட்சிகள் முழுவதிலும் உள்ள பலதரப்பட்ட கருத்துக்களைப் பிரதிபலிப்பதிலும், கொள்கை வகுப்பதில் அதன் முழுமையான வகிபாகத்தை நிறைவேற்றுவதிலும் பாராளுமன்றத்திற்கு காணப்படும் வாய்ப்புகள் மற்றும் அது எதிர்கொள்ளும் சவால்கள் தொடர்பாக எமது காங்கிரஸ் கற்றுக் கொள்வதற்கு நிறைய விடயங்கள் உள்ளன.

இத்தகைய சாத்தியமான வாய்ப்புகள் மற்றும் பல வேறு விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடுவதற்கும், பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் தூதரகத்திற்கும் மற்றும் வாஷிங்டனில் உள்ள அதிகாரிகளுக்கும் இடையே பல பாலங்களை உருவாக்குவதற்குமான ஒரு மன்றமாக இலங்கை-அமெரிக்க பாராளுமன்ற நட்புறவுச் சங்கம் செயற்படும் என நான் நம்புகிறேன். இன்று இதை ஆரம்பிப்பதற்கு வாழ்த்துக்கள், மற்றும் சங்கத்தின் எதிர்கால நடவடிக்கைகளைப் பார்ப்பதற்கு ஆவலுடன் காத்திருக்கிறேன்.